ஸ்ரீகுருப்யோ நம :

# ஸ்ரீகுருப்ரகாசம்

சுடர். 3

## தேடிய மார்க்கம்

கருண கட்க பாதேன ச்சித்வா பாசாஷ்டகம் கிசோ :1
யம்யகானந்த ஜனக : ஸத்குரு: யோ அபிதீயதே –(குரு கீதை 2–21)
எட்டுவிதமான பாசங்களையும் "கருணை" எனும் கத்தியால் அறுத்து நன்றாக ஆனந்தம் என்ற குழந்தையைப் பிறப்பிப்பவர்தான் ஸத்குரு என்பவர் ஆவார்."

### 1. இல்வாழ்க்கை

தத்துவ சிந்தனையிலே லயித்திருந்த ஸ்வாமிக்கு லௌக்க வாழ்க்கை ப்ரவேசம் ஏற்பட்டது. ஆம். திருமணம் நிகழ்ந்தது. ஸ்ரீமதி மஹாலக்ஷ்மி என்பவர் வாழ்க்கைத் துணையாக வந்தார். 1929ம் ஆண்டு திருமணம் நடைபெற்றிருக்கிறது. இவர்களது பத்னியும் இவருக்கேற்றவாறு அனுகுணமாக இருந்து வழி நடந்தார்கள். இயற்கையாகவே மிகவும் சாந்த குணமாகவும் தெய்வ பக்தி உடையவர்களாகவும் இருந்தார்கள். இவர் உறக்கப் பேசி யாரும் கேட்டதில்லை. அன்பும் தாயுள்ளமும் ஒருங்கே அமையப் பெற்றவர். இன்றும் இதே கருணையுள்ளத்துடன் வாழ்ந்து வருகிறார்கள். இந்நிலையில் காலக்ஷேப நிமித்தமும், அவரது ஜன்மத் தொடர்பின் காரணமாகவும் தெய்வச் செயலால் ஸ்வாமியின் குடும்பம் 1930–ல் தமிழ் நாட்டுக்கு வந்து சென்னை மாநகரத்தில் சௌகார்பேட்டை – தங்கச்சாலை தெருவில் குடியேறியது. இங்கிருந்துதான் அவரின் ப்ரகாசம் ஒளிவிடத் தொடங்கியது.

### 2. தேடிய மார்க்கம்

இவரது ஞான நாட்டத்தினூடேயே தன் பெரிய குடும்பப்பொறுப்பையும் கைவிடாமல் நிர்வகித்தார். வைதீக சடங்குகள் செய்து வைத்து அதனால் பெற்ற வருவாயில் குடும்பம் நடத்தி வந்தார். இந்த வழியில் இவரது தமையனாரும் வருவாய் ஈட்டினார்கள். இவர்களது தாம்பத்தியத்தில் இவருக்கு 1938 மார்ச் மாதம் அதாவது ஈஸ்வர வருஷம் பங்குனி மாதம் உத்திர நக்ஷத்திரத்தில் ஒரு மகன் பிறந்தான். அவனுக்கு வெங்கடேசுவரன் என்று பாட்டனார் பெயர் இடப்பட்டது. பெருகி வந்த

குடும்பம், அதை நிர்வாகிக்கும் பொறுப்பு. இத்துடன் கூட அவரது உபாஸனா ஆர்வமும், அதை தக்க குருவைத்தேடி கைக்கொள்ள வேணுமென்ற தாபமும் நாளுக்கு நாள் கூடி வந்தது. அதற்கு ப்ரஹ்ம வித்யா மார்க்கமான ஸ்ரீவித்யா உபாஸனை தான் தக்க மார்க்கம் என அவருக்கு தெரிந்தது. இந்நிலையில் அவரது மன நாட்டத்திலிருந்து அந்த ஸ்ரீவித்யா உபாஸனை மார்க்கம் தான் என்ன ? என்பதை சற்று பார்ப்போம்.

**சுடர் 4**

## மஹாவித்யை

குருதேவார்ப்பணம் வஸ்துதேன துஷ்டோஅஸ்மி ஸுவ்ருதெ
ஸ்ரீகுரோ பாதுகாம் முத்ராம் மூலமந்த்ரம் ச கோபயேத்!! (குருகீதை 2.89)

நல்லவிரதமுடையவளே! குருவுக்கு அர்ப்பணம் செய்யப்பட்ட வஸ்து எதுவோ அதனால் சிவனாகிய நான் சந்தோஷமடைகிறேன். ஸ்ரீகுருவின் பாதுகை முத்திரை, மூலமந்தரம் இவைகளை ரகஸியமாய் வைத்திருக்க வேணும். காப்பாற்ற வேணும்–(என்று சிவபிரான் கூறுகிறார்)

### 1. ஸ்ரீவித்யா ஞானம்

"ஸ்ரீவித்யா" உபாஸனை பற்றி பலர் பல விதங்களாக பல தந்த்ரங்களில், சாஸ்த்திரங்களில் தெளிவாயும், குஹ்யமாயும் விளக்கியுள்ளனர். ஆனால் நமக்கு ஸ்ரீபரதேவதையை உபாஸிக்கும் அந்த ஸ்ரீவித்யை என்றால் என்ன?, அம்பிகையின் ஞானம் எப்படிப்பட்டது? என்றெல்லாம் மிக எளிமையாக உபதேசிக்கிறார் நமது காமகோடி ஸ்ரீபரமாசார்யாள். அவரது வாக்கிலேயே அதனை சிரவணம் செய்வோமே!

"ஸ்ரீவித்யா என்று தேவி உபாஸனையைச் சொல்கிறோம். 'வித்யா' என்றாலே ஞானம் தான் 'அவித்யா' என்றால் அஞ்ஞானம். "ஞானப்பால் தருகிற குருவான அம்மாவாக அம்பிகை இருக்கிறாள். இந்த்ராதி தேவர்களுக்கும் ஞானம் தந்தவள் அவளேயென ஸாம வேதத்தைச் சேர்ந்த "கேன உபநிஷதம்' கூறுகிறது. "கெட்டுப்போன ப்ரஹ்மத்தைக் கேன உபநிஷத்தில் தேடு "என்ற வாக்கியம் ஒன்றுண்டு .... மாறாத ஜயம் ஆத்ம ஜயம் தான். உபநிஷத்தில் 'பஹு சோபமானாம்'– மிகவும் சோபை பொருந்தியவள் என்பதற்கு அர்த்தம் செய்கிறபோது 'சோபை உள்ளவற்றுக்கெல்லாம் மேலான

உத்க்ருஷ்டமான சோபை ஞானம் தான்'– வித்யைதான். அந்த வித்யா ரூபிணியே தேவி (உமா)–"ஸர்வக்ஞத்தத்துவமான பரம்பொருளுடன் இரண்டற சேர்ந்திருக்கிற ஞானஸ்வரூபிணியே அவள் "என்று ஸ்ரீபகவத்பாதர் கூறுகிறார்– "நாதமே அவளுக்கு சரீரம் மாதிரி..... சப்தமயம், வாக்மயம் – 51 அக்ஷரங்களுமே அவளுக்கு சரீரமாக இருக்கிறது. அதில் முழுக்க முழுக்க அறிவே வியாபத்திருக்கிறது. இந்த அறிவைத்தான் ஞானாம்பிகை என்பது– மாறிக் கொண்டும் அழிந்து கொண்டும் இருப்பவைகளை ஸத்தியமென்று நினைக்காமல், மாறாமல் சாசுவதமாக உள்ள ஒரே 'வஸ்து' வை அதற்கு வேறாக 'நான்' என்று தனியாக ஒன்று இல்லை என்று அனுபவத்தில் தெரிந்து கொள்வது தான் உண்மையான 'அறிவு' இது தான் ஞானம் என்பது. இதனை தருவது தான் ஸ்ரீவித்யை."

–இது ஆசார்ய வாக்யம்–

இனி இதை வேறு ஒரு கோணத்தில் சிந்திக்கிறோம்.

## 2. ப்ரஹ்ம வித்யா

யல்லாபாத் நாபரோ லாபோ யத்ஸுகாத் நாபரம் ஸுகம்!
யத்ஞானத் நாபரம் ஞானம் தத் ப்ரஹ்மேத் யவதாரயேத் !!

–இது சங்கரரின் ஆத்ம போதம்,

எந்த வஸ்துவை அடைவதை விட வேறு உயர்ந்த லாபம் கிடையாதோ. எந்த சுகத்தைக் காட்டிலும் வேறு உயர்ந்த சுகம் கிடையாதோ, எதை அறிவதைக் காட்டிலும் வேறு ஞானம் கிடையாதோ அதையே 'ப்ரஹ்மம்' என்று தீர்மானிக்க வேண்டும். இந்த ப்ரஹ்ம ஞானம் முதலில் உதயத்தில் ஒரு மனோவ்ருத்தியே. இந்த வ்ருத்திக்கு அகண்டகார வ்ருத்தி என்று பெயர். இந்த வ்ருத்தி ஞானத்தால் தான் ஒருஜீவள் தன் ஸாதனபலத்தால் தன் நிஜ ஸ்வரூபத்தை அறிந்து கடைசியில் 'சித்சக்தி' யாகிறான். இந்த ஜீவனுடைய ஜீவத்வம் மறைந்தால் வ்ருத்தி ஞானத்திற்கு இடம் இல்லை. ஆங்காங்கே தேங்கியுள்ள நீர்த்துளிகளில் தெரியும். ஸூர்ய பிம்பங்கள் ஜலம் வற்றினால் அந்த பிரதிபிம்பங்களுக்கு மூல காரணமான ஸூர்யனுடனேயே கலந்துவிடுகிறதோ அது போலவே மனம், புத்தி, சித்தம், அஹங்காரம் என்ற உபாதிகள் மறைந்த உடனேயே அவைகளில் பிரதிபலித்துக் கொண்டிருந்த ஆத்ம சைதன்யம், சித் சக்தி என்கிற பர சைதன்யத்துடன் கலந்து விடுகிறது. இந்த பாவமே தான் முக்தி நிலை. இதுவே 'அஹம்

'பதவ்யாக்யானம் என்பர் பெரியோர் இதனை உபன்யஸிப்பதாலோ, எழுதுவதாலோ, படிப்பதாலோ ஒரு நாளும் அனுபவபூர்வமாக உணரமுடியாது. இந்த–ப்ரஹ்மநிலை அடைவுக்கு 'ப்ரஹ்மவித்யாஉபாஸனை' ஸாதனா முறையாகத் தான் ஸ்ரீவித்யா என்ற ஸபர்யை ஏற்பட்டது.

### 3. குப்தவித்யை

ஸ்ரீவித்யை மிகவும் ரஹஸ்யமானது என்பது சாஸ்த்ர ப்ரஸித்தம். குப்தமாக இருப்பதை எக்காலத்திலும் பிரகடனப் படுத்த முடியாது. ப்ரகடனப் படுத்தப்படுவது குப்தமல்ல. ஏனென்றால் ப்ரகடனப்படும் போதே குப்தமானது ப்ரஷ்டமாகி விடுகிறது. அதனால் அதனை குப்தம் ரஹஸ்யம் என்று குறிப்பிட முடியாது, ஏனெனில் வெளிப்பட்டு விடுகிறதனால். தனது சொந்த நிலையிலேயே இருப்பது தான் மோக்ஷம் என்பது– குப்தமும் தனது சொந்த நிலையிலேயே இருப்பதால் அது எப்போதும் மோக்ஷத்திலேயே தான் இருக்கிறது. எனவே இந்த குப்தமான ஸ்ரீவித்யை –ரஹஸ்யமான ஸ்ரீவித்யை – நமது அன்றாட வாழ்வில் நாம் இயங்கும் செய்யும் ஒவ்வொரு இயக்கச் செயலிலும் (வ்ருத்தி) எப்போதும் நிலையாக, குப்தமாகவே தான் இருந்து கொண்டிருக்கிறது. இதனை நம்மால் ப்ரகடனமாக ஆக்க முடியாது. ஏனென்றால் எது பிரகடனப்படுத்த முடியாமல் இருக்கிறதோ அது தானே குப்தம் – மோக்ஷம் சிவசக்தி மயமான ஞானம் தான் குப்தமான ஸ்ரீவித்யை,
இதனை ஒவ்வொருவரும் அவரவர்களே தன் ஸாதனா பலத்தால் குப்தமாக அறிந்து உணர்ந்து கொள்ள வேண்டியது. அப்படி எவன் உணருகிறானோ அவன் தான் முக்தன். இதனால் தான் சாஸ்த்ரம் 'குப்தோ முக்த: ப்ரகடோ ப்ரஷ்ட:' என்று கூறியிருக்கிறது. இந்நிலை அனுபவப்படுவது தான் ஸ்ரீவித்யா உபாஸனை என்பதாகும்.

சாஸ்த்ரம்– 'வித்யா ஹி கா' ?
பிரம்ம கதி பிரதாயா ||

–எது வித்யை என்று கேட்டு, எது பிரம்ம நிலையை ஸித்திக்கப் பண்ணுகிறதோ அது தாள் வித்யை என்று பதிலும் சொல்லுகிறது. இதனால் தான் பிரபலமானதும் மந்த்ர மயமானதுமான ஸ்ரீலலிதா த்ரிசதீ "மோக்ஷைக ஹேதுர் வித்யா ஸா ஸ்ரீவித்யா நாத்ர ஸம்சய: " என்று கூறுகிறது.

## 4. ஸ்ரீவித்யாஉபாஸனா

தேவியின் ஸாந்நித்யம் விகஸிக்கும் இடம் ஸ்ரீசக்ரம், அவளது மந்த்ரமான பஞ்சதசாக்ஷரியான ஸ்ரீவித்யை, இதனை உபதேசித்த ஸத்குரு, அவரிடத்திலே உபதேசம் பெற்ற ஸாதகனான சிஷ்யன், இந்த நான்கும் பராசக்தி என்கின்ற ஸம்வித் ஸ்வரூபமான தேவியிளிடத்திலே ஐக்யப்படும் நிலையை உறுதி செய்யும் ஸாதனையே ஸ்ரீவித்யாஉபாஸனா ஸ்தூல–ஸூக்ஷ்ம–காரணம் என்கின்ற உடலின் முப்பிரிவுக்குள்ளும் புகமுடன் இருந்து அந்தர் யாமியாக விளங்கி இந்த சரீரத்திலே நடைபெறும் விழிப்புச் செயல்களிலும், கனவுலகத்திலும், ஆழ் உறக்கத்திலும் நடைபெறும் விருத்திகளுக்கு சாக்ஷியாக நிலைபெற்று ஆட்சி செய்பவளான ஸ்ரீதிரிபுரஸுசுந்தரியின் தத்துவங்களை மந்திரமாகவும், தந்திரமாகவும் யந்திரமாகவும் தெரிந்து கொள்ளும் வித்யையே ஸ்ரீவித்யை.

## 5. ஸ்ரீவித்யா சாஸ்த்ரம்

ஞான அடைவுக்கு வழிகோலும் இந்த ஸ்ரீவித்யா உபாஸனைக்கு ஸ்ரீபரசுராமர், துர்வாஸர் போன்ற மஹரிஷிகள் பத்ததி முறை வகுத்துள்ளார்கள். இவை பலவிதமான தந்த்ரங்கள் உபநிஷத்துக்களின் ஸாரதர்மங்கள் இவைகளின் தொகுப்பாகவே அமைந்துள்ளன. மேலும் ஸ்ரீவித்யா சாஸ்த்திரத்திற்கு இன்று Authority –ஆக விளங்குபவர்கள் ஸ்ரீபாஸ்கரராயர் என்ற பாஸுராநந்தநாதர். இவர் கிபி 17–18ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள் 96 வயது வரை பிரகாசித்தவர்கள் இதற்கேற்றார்போல் அறிவொளி மிக்கவராக வித்வத்ஸூர்யன் என்னும் படியாக இருந்தவர். மந்த்ர சாஸ்திரத்திற்கு ப்ரமாணபூதர், அம்பாளின் பரமபக்தர். ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமத்திற்கு "ஸௌபாக்யபாஸ்கரம்" என்ற உரை கண்டிருக்கிறார். இதில் ஸ்ரீவித்யா சம்பந்தமான அனேக ரஹஸ்ய தத்வார்த்தங்களை ப்ரகாசம் செய்தவர்கள். மேலும் பல நூல்கள் இயற்றியுள்ளார்கள். இதில் விசேஷம் என்னவென்றால் இவர் ஒரு தீவிரமான ஸ்ரீவித்யா உபாஸகர், பூரண தீக்ஷை பெற்றவர் என்பதே. மேலும் ஆங்கிலேயரானவரும் ஸ்ரீவித்யாதீக்ஷை பெற்று அந்தகலைக்கே Authority ஆக இருப்பவர் ஆர்தர்ஆவலான் என்பவர்.

இத்தகைய வித்யை ஸத்குருவின் தீக்ஷா பூர்வமான அனுக்ரஹபலத்தினால் தான் ஸித்திக்கும் இதில் எவ்வித ஸந்தேகமும் இல்லை. இது அனுபவ ஸித்தாந்தமாம். இப்படிப்பட்ட ஸ்ரீவித்யையைத்தான் ஸ்ரீஸ்வாமி அவர்களின் மனம் நாடி, தேடி வந்தது.. இவர் பல க்ரந்தங்கள்,

ஆகமங்கள். வேத சாஸ்த்ரங்கள். தந்த்ரங்கள் பார்த்து உணர்ந்தவராதலால் ஸத்குரு எப்படிப்பட்டவராக இருக்கவேணுமென்று தெரிந்து வைத்திருந்தார். பின்னால் அவர் எழுதிய வியாஸத்திலிருந்தே அவரது தேடலின் தத்துவம் தெரிய வருகிறது. அவரது வாசகங்களிலேயே இதனைப் படிப்போம்:–

## 6. குருவின் லக்ஷணங்கள்:

குரு 'அழகாகவும், கடுகடுப்பு இல்லாத முகத்தை உடையவராகவும், ஸமர்த்தராகவும், ஸுலபராகவும் இருக்க வேண்டுமென்றும், இன்னும் பலவித லக்ஷணங்கள் கூடவேண்டும் என்றும், அனேக தந்த்ரங்கள், சாஸ்த்ங்கள் கூறுகின்றன. இதில் மேற்கூறிய நான்கு குணங்களும் சிஷ்யனுக்கும் இருக்கவேண்டும். இப்போது சிஷ்யனின் பணத்தைப் பிடுங்குவதில் ச்ரத்தையாக இருக்கும் குருக்கள் அனேகம் பேர் இருக்கிறார்கள். ஆனால் சிஷ்யனின் சித்தத்தை அபஹறிக்கும் குருதுர்லபமே தான். மேலும் தந்த்ரங்கள் கூறும் லக்ஷணங் களுடைய இக்கலிகாலத்தில் கிடைப்பது மிகவும் கஷ்டம். 'அதற்காக தீக்ஷை பெறுமலும். மந்த்ரோபதேசம் பெறுமலும் இருக்க முடியுமா? 'என்று கேட்டால் இருக்க முடியாது. "குருவும்தாரமும் கொண்டவன் வினைபோல" என்னும் வசனத்தை அனுஸரித்து முன் வினையினால் தான் குருநாதனும் கிடைப்பார். எவ்விதம் இருந்தாலும் நமக்கு ஏற்பட்ட குருநாதர் வாக்யத்தில் பரிபூர்ணமான திட நம்பிக்கை வைத்து தாம் நடந்து வந்தோமானால் நமக்கு ஒரு நாளும் கெடுதல் வராது. இங்கு "ஸ்ரீகுருவின் உண்மையான ஸ்வரூபம்" கூறுகிறேன்:– "நம் சிரஸில் விளங்கும் ப்ரஹ்மரந்தரத்தின் நடுவில் இருக்கும் 1000 இதழ் தாமரையின் மத்தியில் அ.க.த என்ற தொடர் அக்ஷரங்களை வெளியிலும், ஹ,ள,க்ஷ என்ற அக்ஷரங்களை உள்ளும் வைத்ததான ஒரு முக்கோணம் விளங்குகிறது. அதில் மணிமயமான பீடத்தில் உண்மை குருவின் ஸ்ரீபாதுகைகள் விளங்குகின்றன......." இப்படிப்பட்ட குருவிற்கும் தேவதைக்கும் சிறிதும் பேதமில்லை.பேதம் நினைத்தல் அவன் பாபத்திற்காளாகிறான். இப்படி அபேதமாக உபாஸிப்பவனுக்கு குருவினால் கூறப்பட்டதும், கூறப்படாத துமான விஷயங்கள், தத்வங்கள், சாஸ்தரத்திற்கு விரோதமில்லாமல் தனக்குள்ளாகவே ஸ்பூர்த்தியடையும். பக்தி

என்றால் குரு, மந்த்ரம், தேவதை. தான் என்ற இந்த நான்கும் ஒன்று என்ற பாவனை தான். குருவைக் குறித்து இன்னும் எவ்வளவோ கூறலாம். புத்திசாலிக்கு இதுவே போதும்."

## 7. குருவின் தேவை

இப்படி வேதங்கள், உபநிஷத்துக்கள், தந்த்ரங்கள் இவைகளை 'ஸ்வாத்யாயம் 'என்ற முறையில் ஆராய்ந்ததில் மேற்கண்ட பதிலே தான் கிடைத்தது. இப்படிப்பட்ட ஒரு ஸத்குரு வேணுமே! மனம் கிடந்து அலை பாய்ந்தது. மனம் மட்டுமல்ல கால்களாலும் பல இடங்களில் சென்று பெரியோர்கள். உபாஸகர்கள், மஹான்கள் என்று கூறப்படுபவர்களில் பலரிடம் சென்று ஆராய்ந்தார்கள். இப்படி இவர் சென்ற விடங்களிலெல்லாம் ஞான உபதேசம் வெறும் வ்யாபாரமாகவும். ப்ரகடமாக இருக்கப்பட வேண்டியது ரஹஸ்யமாகவும். ரஹஸ்யமாக இருக்க வேண்டியது ப்ரகடமாகவும் இருக்கக் கண்டார். எனவே மிகவும் இதனால் சோர்வுற்ற நிலையில், ஆனால் தீவ்ர லக்ஷ்ய நோக்குடன் இருக்கும் நிலையில், தான் "ஞானகுரு" ஸ்ரீஸுப்ரமண்யர் என்ற பெயருடன், 'ஸ்ரீஸார்' என்று எல்லோராலும் பொதுவில் அழைக்கப்படுவராக, "ஸ்ரீசிதானந்த நாதர்" என்ற தீக்ஷா நாமத்தைக் கொண்டவராக ஸ்ரீஸ்வாமிக்கு 1935 கடைசியில் கிடைத்தார், அவர் யார்? எங்கிருந்து கிடைத்தார்? அவர் மகிமை என்ன? அடுத்து பார்ப்போம்.